**அம்பாறை நகர சபை**
**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 15 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாறை நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குச் சொந்தமான காணியும் கட்டிடமும், மோட்டார் வாகனமும் வண்டியும் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டில் சபை நிதியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 03 நிர்மாண வேலைகளுக்கு உரிய பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 1,393,346 தொகை மூலதனமாக்கப்படவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 2018 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை |

| | | | |
|---|---|---|---|
| | 997,101 தொகை செலவிடப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான கூட்டுப்பசளைத் தளம் மற்றும் வாகனத் தளம் என்பன மூலதனமாக்கப்படவில்லை. | | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 04 வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,476,181 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்களுக்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | 2018 கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நவகன்கொட 7 ஆவது ஒழுங்கை திருத்தியமைக்கும் வேலைக்காக செலுத்த வேண்டிய ரூபா 748,926 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (vi) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் உறுப்பினர் படி ரூபா 5,262,740 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு அட்டுறு ஆண்டு அடிப்படையாகக் கொள்ளப்படும். |
| (vii) | மீளாய்வாண்டிற்குரிய விளம்பர அறிவித்தல்கள் 02 நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 320,000 தொகையான கட்டணம் கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு அட்டுறு ஆண்டு அடிப்படையாகக் கொள்ளப்படும். |
| (viii) | பயன்பாட்டுப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைத்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 308,995 தொகை ரூபா 230,115 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு அட்டுறு ஆண்டு அடிப்படையாகக் கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ix) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 455,866 தொகையான கொள்வனவுகளுக்காக நிதிக்கூற்றுக்களில் பொது வழங்கல் கடன் கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு அட்டுறு ஆண்டு அடிப்படையாகக் கொள்ளப்படும். |
| (x) | சபைக்குரிய 02 நிலையான வைப்புக்களுக்கு உரியதாக மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 263,009 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளை சரிசெய்வதற்கு அட்டுறு ஆண்டு அடிப்படையாகக் கொள்ளப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் மற்றும் ஏடுகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 2,203,955 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டை கண்டறிந்து சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்து எதிர்வரும் ஆண்டின் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ஒன்று சேர்க்கப்பட்ட ரூபா 3,106,385 தொகையான பெறுமதி சேர் வரித்தொகை உள்நாட்டு இறைவரித் திணைத்தளத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறுமதி சேர் வரித்தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 158,600,241 தொகையான 04 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 14,859,005 தொகையான 03 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது உரிய ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம். | 22 ஊழியர்களுக்காக 2018 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணம் ரூபா 375,147 தொகை குறைவாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | அதிகாரரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் ஊழியர் சேமலாப நிதியப் பணத்தை அனுப்பி வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டம். | 22 ஊழியர்களுக்காக 2018 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு பங்களிப்பு பணம் ரூபா 93,864 தொகை குறைவாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | அதிகாரரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு பங்களிப்பு பணத்தை அனுப்பி வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | இரண்டு கணக்குகளுக்குரிய செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 51,468 பெறுமதியான 18 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம் தற்போது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 4,351,367 பெறுமதியான 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம் தற்போது 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 24 வானங்களுக்கு எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம் தற்போது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் தொடர்பாக தனிப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லப்படடிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றது. |

**1.4.2 வரித் தேவைகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டி கோவையின் 5.4.11 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் பெறுமதி சேர் வரி பட்டியல் பத்திரம் பெறப்படாமல் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 03 வேலைகளுக்காக பெறுமதி சேர் வரி ரூபா 206,251 செலுத்தப்பட்டிருந்தது. | வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் வரிப்பட்டியல் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது. |
| (ஆ) மேற்கூறப்பட்ட வழிகாட்டி கோவையின் 5.4.12 இன் பிரகாரம் பெறுமதி சேர் வரியை மேவுகை செய்வதற்காக பணம் செலுத்தியதன் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்படவில்லை. | வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,582,732 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,744,657 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு | வங்கி இணக்கக்கூற் | ஏற்றுக்கொள்கின்றோம். மக்கள் வங்கியின் கணக்கில் வங்கி |

| | | |
|---|---|---|
| ரூபா 5,649,109 கூட்டு மீதியான 02 வங்கிக் கணக்குகளுக்கான வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்படவில்லை. | று தயாரிக்கப்பட வேண்டும். | இணக்கக்கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 8,831,000 | 8,903,372 | 8,377,577 | 26,307,590 | 10,720,000 | 11,188,507 | 9,955,907 | 25,781,795 |
| (ii) | வாடகை | 18,019,880 | 11,441,405 | 11,443,976 | - | 7,723,650 | 6,212,365 | 7,156,619 | 2,571 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,404,000 | 3,227,021 | 3,227,021 | - | 866,000 | 1,939,152 | 1,939,152 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 29,295,475 | 35,991,983 | 35,619,662 | 1,413,000 | 28,903,475 | 26,931,731 | 26,003,175 | 1,984,431 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 87,332,578 ஆக இருந்ததுடன் ஆண்டில் ரூபா 58,668,236 தொகை அதாவது 67 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 567,500 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்படாமையினால் ஆண்டில் அடைவதற்குத் தேவையான | ஒவ்வொரு ஆண்டிற்காகவும் செயல் நடவடிக்கை | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| நோக்கங்கள் மற்றும் எதிர்பார்த்த செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக அறிந்திருந்திருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற 03 வங்கிக் கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டில் ஒவ்வொருமாத இறுதியின் போதும் காசு மீதி ரூபா 6,246,996 முதல் ரூபா 33,927,458 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அந்தப் பணத்தை ஆக்கப்பூர்வமான முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மிகைப் பணம் முதலீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையில் கணக்காளர் பதவி 2010 முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது. | பதவியணியினரின் வெற்றிடங்கள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| | நிரப்பப்பட வேண்டும். | |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினரில் 26 பதவிகளில் 61 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியின ரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற 42 காணிக் கூறுகள் மற்றும் 14 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆதனங்கள் மற்றும் வாகனங்களின் சட்டரீதியான உரித்து சபையின் பெயரில் கையேற்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 மார்ச் 24 ஆம் திகதி வழங்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | ஓவ்வொரு ஆண்டிற்காகவும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில் லை |

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் ரூபா 327,297 தொகை செலவில் | நிறைவேற்றப்ப டாத | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | சபை அலுவலகத்தின் மேல் மாடியில் மலசலகூடத்தை நிர்மாணிப்பதற்குரிய நிறைவேற்றப்படாத வேலைக்காக ரூபா 60,314 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | வேலைக்காக மேற்கொள்ளப் பட்ட கொடுப்பனவுக ள் மீள அறவிடப்பட வேண்டும். | |

(ஆ) நகர சபையின் விருந்தினர் விடுதி நிர்மாணத்தின் முதலாவது கட்டம்

---

| | | | |
|---|---|---|---|
| (i) | 2017 சபை நிதியத்தின் கீழ் விருந்தினர் விடுதியை நிர்மாணிக்கும் முதலாவது கட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 மார்ச் 05 ஆம் திகதி முதல் 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 யூலை 02 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படவில்லை. ஒப்பந்தத்திற்கு உரிய செயலாற்றல் பிணைமுறி அல்லது செல்லுபடிக்காலம் 2019 மார்ச் 04 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒப்பந்த நிர்மாண நடவடிக்கைக ள் மேற்கொள்ளப் பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |
| (ii) | அளவிடைப் பத்திரத்தின் 7 ஆவது வேலை விடயத்தின் பிரகாரம் ரூபா 91,350 பெறுமதியான தொங்கவிடும் மின்குமிழைப் பொருத்துவதற்கு குறைந்த விலையான LED மின்குமிழ் பொருத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |
| (iii) | அளவிடை பத்திரத்தின் 8 ஆவது வேலை விடயத்தின் பிரகாரம் பிரதான வயர் 35 மீற்றர் பொருத்தப்படாது அதற்காக ரூபா 13,300 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்ப டாத வேலைக்காக செய்யப்பட்ட கொடுப்பனவுக ள் மீள அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 15 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நியதிச் சட்டக் காலத்தில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |